பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
27 05 2025 12 40
செவ்வாய்கிழமை பிற்பகல்
ஆகாஷவாணி செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. ஆபரேஷன் சிந்துார் நடவடிக்கைக்கு நாடுதழுவிய வரவேற்பும், உற்சாகமும் ஏற்பட்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. பாதுகாப்புத் துறையில் சுயசார்பை ஊக்குவிக்கும் வகையில் அதிநவீன நடுத்தர ரக போர் விமான திட்டத்தை செயல்படுத்த அத்துறைக்கான அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் ஒப்புதல் அளித்துள்ளார்.

3. புதுச்சேரியில் இன்று யோகா திருவிழாவை மத்திய இணையமைச்சர் திரு பிரதாப் ராவ் ஜாதவ் தொடங்கி வைத்தார்.

4. கனமழை காரணமாக தமிழகத்தில் உள்ள முக்கிய அணைகளின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.

5. ஆசிய தடகள சாம்பியன் போட்டியில் இந்தியாவின் செர்வின் செபாஸ்டியன் வெண்கலப் பதக்கம் வென்றார்.

*--- இனி விரிவான செய்திகள் ---*

ஆபரேஷன் சிந்துார் நடவடிக்கைக்கு நாடுதழுவிய வரவேற்பும், உற்சாகமும் ஏற்பட்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

குஜராத் மாநிலம் காந்தி நகரில் 5 ஆயிரத்து 536 கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சித் திட்டங்களை தொடங்கி வைத்து புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி அவர் பேசினார்.

இந்தியா தற்போது உலகின் நான்காவது பெரிய பொருளாதார நாடாக உருவெடுத்துள்ளதை சுட்டிக்காட்டிய பிரதமர், 2047-க்குள் வளர்ச்சி அடைந்த நாடாக மாற்றுவதே அரசின் இலக்கு என்றார்.

நாடு சுதந்திரம் பெற்ற காலத்திலேயே காஷ்மீரில் தீவிரவாத தாக்குதல் நடத்தப்பட்டதாக கூறிய பிரதமர், அப்போதே உரிய நடவடிக்கை எடுத்திருந்தால் 75 ஆண்டு கால பாதிப்பை தவிர்த்திருக்கலாம் என்றார்.

இந்தியாவுக்கு எதிராக பாகிஸ்தான் நடத்தி வரும் தாக்குதலை மறைமுகப் போராக கருத முடியாது என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

><><><><

முன்னாள் பிரதமர் ஜவஹர்லால் நேருவின் நினைவுதினம் இன்று அனுசரிக்கப்படுகிறது.

இந்நாளையொட்டி அவருக்கு மரியாதை செலுத்துவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தமது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

தில்லி சாந்திவனத்தில் உள்ள நேருவின் நினைவிடத்தில் காங்கிரஸ் மூத்த தலைவர் திருமதி சோனியா காந்தி மற்றும் அக்கட்சி நிர்வாகிகள் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

><><><><

அதிநவீன நடுத்தர ரக போர் விமான திட்டத்தை செயல்படுத்த பாதுகாப்பு அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் ஒப்புதல் அளித்துள்ளார்.

இதுதொடர்பாக பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், இந்த புதிய திட்டம் உள்நாட்டு திறமையை மேம்படுத்தி விமான தயாரிப்பு தொழில்துறையின் விரைவான வளர்ச்சிக்கு உதவிடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இத்திட்டம் பொதுத் துறை மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு சம வாய்ப்புகளை வழங்குவதோடு, ஏலத்தில் தேர்ந்தெடுக்கப்படும் நிறுவனம் இந்திய சட்ட விதிமுறைகளுக்கு உட்பட்டு செயல்படுவது அவசியம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் உள்நாட்டு நிபுணத்துவத்தை முழுமையாக பயன்படுத்தி விமான தயாரிப்பு தொழில்துறையில் சுயசார்புக்கு வழிவகுக்கும் என்றும் அந்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

><><><><

சர்வதேச யோகா தின கொண்டாட்டங்களுக்கு முன்னோட்டமாக புதுச்சேரியில் இன்று நடைபெற்ற யோகா திருவிழாவை ஆயுஷ் துறை இணையமைச்சர் திரு பிரதாப் ராவ் ஜாதவ் தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் பேசிய அவர், யோகா பயிற்சி தற்போதைய காலக் கட்டத்திற்கு மிகவும் அவசியம் என்பதோடு, நமது ஆரோக்கியத்தில் ஒருங்கிணைந்த அம்சமாக இருக்கும் என்றும் குறிப்பிட்டார்.

வயது, பாலினம் ஆகியவற்றை கடந்து உலகளாவிய அமைதி மற்றும் நல்லிணக்கத்திற்கு யோகா வழி வகுப்பதாகவும் திரு பிரதாப் ராவ் ஜாதவ் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ் நாதன், முதலமைச்சர் திரு ரங்கசாமி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

><><><

பாகிஸ்தானுக்கு எதிராக இந்தியா ஒருபோதும் தானாக போர் நடத்தியதில்லை என்று ஆபரேஷன் சிந்தூர் தொடர்பான அனைத்துக் கட்சிக் குழுவின் தலைவர் திரு ரவிசங்கர் பிரசாத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அமைக்கப்பட்டுள்ள 7 குழுக்களில் ஒரு குழுவின் தலைவரான திரு ரவிசங்கர் பிரசாத், பிரான்ஸ் தலைநகர் பாரீசில் இந்திய வம்சா வளியினரிடம் கலந்துரையாடினார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், தீவிரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் நிலைப்பாட்டிற்கு இந்திய வம்சா வளியினர் ஆதரவு தெரிவித்ததாக குறிப்பிட்டுள்ளார்.

இதேபோன்று திரு சஞ்சய் குமார் ஜா தலைமையிலான மற்றொரு குழுவினர் சிங்கப்பூரில் அந்நாட்டு வெளியுறவு மற்றும் உள்துறை அமைச்சர்களை சந்தித்து பஹல்காம் தீவிரவாத தாக்குதலைத் தொடர்ந்து இந்தியா மேற்கொண்ட நடவடிக்கைகளை விளக்கிக் கூறினர்.

திரு சசி தரூர் தலைமையிலான் குழுவினர் கயானா நாட்டில் அந்நாட்டு அதிபர் திரு முகமது இர்பான் அலி உள்ளிட்ட தலைவர்களை சந்தித்து தீவிரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் நிலைப்பாட்டை விளக்கினர்.

மேலும் அந்நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களையும் இக்குழுவினர் சந்தித்து ஆபரேஷன் சிந்தூர் குறித்து எடுத்துரைத்தனர்.

திருமதி சுப்ரியா சுலே தலைமையிலான குழுவினர் தோஹாவில் ஆபரேஷன் சிந்தூர் குறித்து எடுத்துரைத்தனர்.

திரு ஸ்ரீகாந்த் ஷிண்டே தலைமையிலான குழுவினர் ஆப்பிரிக்க நாடாக காங்கோவில் இந்திய வம்சா வளியினரிடம் கலந்துரையாடினர்.

அப்போது எல்லைதாண்டிய தீவிரவாதத்தை ஒடுக்குவதில் ஆபரேஷன் சிந்தூர் ஒரு புதிய அணுகுமுறையாக அமைந்தது என்று எடுத்துரைத்தனர்.

><><><

கடலோர மற்றும் தெற்கு உட்புற கர்நாடகா, கொங்கன், கோவா, மற்றும் மகாராஷ்டிராவின் மத்திய பகுதிகளில் மிக கனமழை பெய்யக்கூடும் என வானிலை மையம் தெரிவித்துள்ளது.

தமிழகம், கேரளா, புதுச்சேரி, அந்தமான் நிகோபார் உள்ளிட்ட மாநிலங்களில் அடுத்த 3 நாட்களுக்கு கனமழை பெய்யக்கூடும் என்றும் அந்த மையம் கூறியுள்ளது.

இதனிடையே, தமிழகத்தின் மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதிகளில் பரவலாக கனமழை பெய்து வருகிறது.

இதன்காரணமாக, மாநிலத்தின் முக்கிய நீராதாரங்களில் ஒன்றாக திகழும் முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டம் வினாடிக்கு 5 ஆயிரம் கனஅடியாக அதிகரித்துள்ளது.

அணையின் தற்போதைய நீர்மட்டம் 118 அடியாக உள்ளது.

ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் அருகே உள்ள பவானிசாகர் அணையில் நீர்வரத்து 18 ஆயிரம் கனஅடிக்கு மேல் உள்ளதால் அணையின் நீர்மட்டம் ஒரே நாளில் 3 அடி உயர்ந்துள்ளது.

கோவை மாவட்டம் சிறுவாணி அணைப் பகுதியில் பெய்யும் மழை காரணமாக அந்த அணையின் நீர்மட்டம் 4 அடி உயர்ந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் – ஹரிஹரன் – 44 செகண்ட்ஸ்)

நெல்லை மாவட்டத்தில் உள்ள பாபநாசம், சேர்வலாறு, மணிமுத்தாறு அணைகளில் நீர்மட்டமும் வெகுவாக அதிகரித்துள்ளது.

அம்பாசமுத்திரம் வனப் பகுதியில் பெய்யும் மழையால் மணிமுத்தாறு அணையில் நீர்வரத்து அதிகரித்திருப்பதை அடுத்து, சுற்றுலாப் பயணிகளுக்கு வனத்துறையினர் தடை விதித்துள்ளனர்.

><><><

மகாராஷ்டிராவில் ஜியோராய் - பீட் நெடுஞ்சாலையில் நேற்றிரவு நேரிட்ட சாலை விபத்தில் 6 பேர் உயிரிழந்தனர். ஒருவர் காயமடைந்தார்.

இந்த சாலையில் வந்து கொண்டிருந்த கார் ஒன்று சாலைத்தடுப்பில் மோதியதில், இவர்கள் உயிரிழந்ததாக பீட் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் திரு நவ்நீத் கன்வத் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, உத்தரப்பிரதேச மாநிலம் கனோஜ் பகுதியில் நிகழ்ந்த சாலை விபத்திலும் சிலர் காயமடைந்தனர்.

><><><

பழங்குடியினரின் முன்னேற்றத்திற்காக மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு ஜூவல் ஓரம் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், பழங்குடியினரின் முன்னேற்றத்தில் காணப்படும் இடைவெளியை அகற்ற தமது அமைச்சகம் தீவிர முன்முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக கூறினார்.

பழங்குடியினத்தை சேர்ந்த சுதந்திர போராட்ட வீரர் பிர்சா முண்டாவின் பிறந்த நாள், பழங்குடியினரின் கவுரவ தினமாக கொண்டாடப்படுவதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

மத்திய பட்ஜெட்டில் 24 ஆயிரத்து 104 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதாக கூறிய அவர் பிரதமரின் ஜன் மன் திட்டம் பழங்குடியினர் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்தி இருப்பதாகவும் தெரிவித்தார்.

><><><

ஏற்றுமதி சார்ந்த சிறப்பு பொருளாதார மண்டலங்களுக்கு வழங்கப்பட்ட சிறப்பு வரிச்சலுகை மீண்டும் வழங்கப்படும் என மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இது வரும் 1 ஆம் தேதி முதல் நடைமுறைக்கு வரும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் ஏற்றுமதியை உலகச் சந்தையில் அதிகரிக்கும் வகையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

><><><

<u>விளையாட்டுச் செய்திகள்</u>

ஆசிய தடகள சாம்பியன் போட்டியில் இந்தியாவின் செர்வின் செபாஸ்டியன் வெண்கலப் பதக்கம் வென்றார்.

தென்கொரியாவின் குமியில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் 20 கிலோமீட்டர் நடைப்போட்டியில் அவர் இப்பதக்கத்தினை கைப்பற்றினார்.

--------------

சிங்கப்பூர் ஓபன் பேட்மிண்டன் போட்டி இன்று தொடங்கியது.

--------------

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் இன்று லக்னோ அணி – பெங்களூரு அணியை எதிர்கொள்கிறது.

**> End of News <**